சரஸ் பாஸ்கர், உளவியல் ஆலோசகர்



# பொதுநலச் சிந்தனை உடையவள் பெண்!

தலைமைத்துவத்தில் ஆண்களை விடப் பெண்கள் முன்னிலை வகிக்கிறார்கள் என்பது மிகவும் பெருமைக்கும் சந்தோஷத்திற்கும் உரிய செய்தியாகக் கருதுகிறேன். ஒரு மனிதனின் கல்வி அறிவே, தன் தொழில் மற்றும் தொழில் நுட்ப ரீதியான திறன் வளர்வதற்கான காரணமாக அமையும். மேற்குறிப்பிட்டுள்ள ரிப்போர்ட்டின்படி, க்ரியேட்டிவிட்டி எனப்படும் படைப்பாற்றல் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக இருக்கிறது. இதற்கான காரணம், இருவருக்கும் மூளை செயல்பாடு சமமாக உள்ளது.

மூளை செயல்பாடு சமமாக இருப்பினும், ஒரு விஷயத்தைச் செயல்படுத்தும் விதம் மாறுபடுவதற்கான காரணம், இந்தச் சமூகத்தின் கலாசாரப் பாகுபாடுதான். ஆணாதிக்கம் ஆரம்பிக்கும் முன்னர் பெண்களே எல்லாவற்றிலும் முன்னிலை வகித்தனர் என்பது பலருக்கும் ஆச்சர்யமாக இருந்தாலும், அதுவே உண்மை. பெண்கள் என்பதற்காகவோ, அவர்களது தோற்றத்திற்காகவோ இல்லாமல், அவர்களது திறமையினாலேயே ஆண்களைவிட பெண்கள் முன்னேறி வந்தனர். ஆனால், எப்படியோ மெதுவாக ஆணாதிக்கம் உருவாகி, பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது.

இயற்கையாகவே பெண்களுக்கே உரித்தான சில பண்புகளே, அவர்கள் தலைமைத்துவத்தில் முன்னிலை வகிப்பதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஒரு பெண் தாய்மையடையும்போது உடலளவிலும் மனதளவிலும் பல நற்பண்புகள் வளர்ந்துவரும். தன்னம்பிக்கை, நேர்வழிப் பாதை, பொறுப்புணர்வு, அரவணைப்பு, மற்றவரை ஊக்குவிப்பது, பொதுநலச் சிந்தனை என இப்படிப் பல நற்பண்புகள் அவர்களைப் படிப்படியாக முன்னேற வைக்கின்றன. ஒரு காரியத்தை விரைவில் முடித்தாக வேண்டும் என்ற உணர்வு ஆண்களுக்கு இருந்தாலும், அதை நேர்த்தியாக முடிக்கவேண்டும் என்ற உணர்வு பெண்களுக்கே உண்டு. ஒரு பெண், பிற்காலத்தில் ஒரு நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்





பேற்கும்போது அந்த நிர்வாகத்தை நல்லபடியாகக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் எழுவதற்கும், அதற்கேற்ப அவள் செயல்படுவதற்கும் இந்தப் பண்புகளே காரணம்.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்ற கருத்து முற்றிலும் உண்மையே! இடைப்பட்ட காலத்தில்தான் 'அன்னை' என்பதை 'பெற்றோர்' என மாற்றி அமைத்தார்கள் சிலர். ஆனால், அது தவறு என்பது என்னுடைய கருத்து. ஒரு ஆணின் பண்புகளும் பெண்ணின் பண்புகளும் நேர்கோடாக அமையாது. இரண்டு பண்புகளையும் ஒரு குழந்தை கவனித்து வளர்கிறது என்றால் அந்தக் குழந்தைக்குக் கண்டிப்பாக ஒரு குழப்பம் ஏற்படும்.

**ஆ**ண்களை விடப் பெண்களுக்கு அதிக பொதுநல உணர்வு உண்டு. தன்னைப் பாதுகாப்பதிலும், வளர்த்துக்கொள்வதிலும் தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்காமல், தன்னை உயர்த்திக் கொள்வதில் மற்றவருக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைப் பற்றியும் சிந்தித்துச் செயல்படுபவர்கள் பெண்கள்.

திருமணத்திற்கு முன்பு படிக்கும் காலத்தில் ஆண்களை விட பெண்களுக்குத்தான் Maturity எனப்படும் தெளிவான தொலை நோக்குப் பார்வை அதிகம் இருக்கும். ஆனால், திருமணமாகி குழந்தை, குடும்பம் என்றாகும்போது, மெச்சூரிட்டி லெவலில் பெண்களை விட ஆண்கள் முன்னேறி விடுகிறார்கள். திருமணம், குழந்தை, குடும்பம் என்றாகும்போது வேலைக்குச் செல்லும் பெண்மணியாக இருந்தாலும் அவர்களுக்கு வேலைச்சுமை அதிகரிப்பதால் சில பெண்கள் தன்னை வளர்த்துக்கொள்ளும் செயல்பாடுகளில் சிறிது பின்தங்கி விடுகின்றனர் என்பதே இதற்குக் காரணம்.




ஒரே நேரத்தில் குடும்பத்தையும் பார்த்துக்கொண்டு, தன்னுடைய தனிப்பட்ட வளர்ச்சியையும் கவனித்துக் கொண்டு செயல்படும் பல பெண்கள், மல்டி டாஸ்கிங் திறன் மிகுந்தவர்கள். ஆனால், ஆண்களுக்கு இந்த மல்டி டாஸ்கிங் செயல்பாட்டுத் திறன் குறைவுதான். வீட்டு வேலையையும் பார்த்துக் கொண்டு எதிர்கால முன்னேற்றத்திற்கும் செயல்படுவது ஆண்களுக்குக் கடினம். என்னுடைய அனுபவத்தில் பலரும் தங்கள் குடும்பப் பிரச்னைக்காக என்னிடம் ஆலோசனைக்கு வருவதற்குக் காரணம் இதுவாகவே இருந்து வருகிறது.

**தா**ய்மை, அரவணைப்பு, குடும்பப் பிரச்னைகளை முற்போக்குச் சிந்தனையுடன் கையாள்வது என இப்படிப் பல பண்புகளால் பெண்கள் எதையும் தாங்கும் வலிமை பெறுகிறார்கள். இதற்குக் காரணம் பெண்கள் மனதளவில் பொறுமையாகவும் நிதானமாகவும் எல்லா விஷயங்களையும் கையாள்வதுதான். ஒரு விஷயத்தை எடுத்துச் செயல்படுத்துவதற்கான ப்ளானிங் மற்றும் செயல்படுத்தும் முறை மட்டுமல்லாது, என்னால் முடியும் என்ற பாஸிடிவ் வைப்ஸோடு நடத்திக் காண்பிப்பதில் ஆண்களை விட பெண்கள்தான் சிறந்தவர்கள்.

இயற்கையாகவே இத்தனை நற்பண்புகள் நிறைந்த ஒரு பெண், தலைமைத்துவத்தில் சிறந்து விளங்குவதில் என்ன ஆச்சர்யம்? இன்னும் சொல்லப் போனால், இதை இந்த உலகம் இப்போதுதான் படிப்படியாக உணர்ந்து வருகிறது என்பதே உண்மை! ♦